கன்னியாகுமரிக்கும், தர்மபுரிக்கும் ஒருவர் என்று நியமிக்க வேண்டிவரும். அது பரிசிலனையில் இருந்து வருகிறது. தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: முதன்மைக் கல்வி அதிகாரிகள் ஜில்லாவிற்கு ஒருவர் நியமிப்பதற்கு சமீபத்தில் ஹைதராபாத்திலிருந்து வந்த எக்ஸ்பெர்ட் குழு ஆலோசனை கூறியிருப்பதாகவும், அந்தக் குழு கல்விக்காக ஏராளமான பணம் செலவு செய்யப்பட்டும்கூட கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருப்பதாகப் பத்திரிக்கைகளில் செய்தி பார்த்தோம். அது உண்மையா? கல்வி அதிகாரிகள் அதிகமாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் யோசனை கூறியுள்ளார்களா? அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது அரசால் நியமிக்கப்பட்ட குழு அல்ல. கல்வி பற்றி ஆராய்வதற்காகத் திட்டக்குழுவில் டாஸ்க் போர்ஸ் ஒன்று பணியாற்றிவருகிறது, டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில். அவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த கமிட்டி அறிக்கையைப் பொறுத்தவரையில் ஸஜஷன்ஸ் என்ற அளவில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்பதற்குப் பதிலாக குற்றச்சாட்டுகள்தான் அதிகமாக இருந்தன. ஆகவே அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். டாஸ்க் போர்ஸ் பல்வேறு கருத்துக்கள் குறித்து. பல்வேறு பிரச்சினைகளில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். இன்னும் அரசுக்குச் சமர்ப்பிக்கவில்லை. ஒன்றிரண்டு திங்கள்களில் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தபிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Wages for Handloom weavers in Madurai

* 276 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether it is a fact that 15,000 Handloom Weavers in Munichalai area of Madurai demanded wage increase and bonus from Master Weavers; and

(*b*) if so, the steps taken for settlement of the same?

1972 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) 4-10-1971 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் கைத்தறி நெசவாளர்கள் ஊதிய உயர்வுக் கோரிக்கை உட்பட மற்றும் சில கோரிக்கைகளை எழுப்பியதைத் தொடர்ந்து, 12-10-1971 அன்று தறியுடையோர்க்கும் நெசவாளர் களுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன் பாட்டின்படி ஊதியத்தில் ஏற்பட்ட உயர்வு பாவு ஒன்றுக்கு ரூ. 7 ஆகும். ஆனால் 10-12-71 முதல் தறியுடையோர் ஊதியத்தை பாவு ஒன்றுக்கு ரூ. 4 ஆகக் குறைத்தனர். அதன் காரணமாக 3-1-1972-லிருந்து நெசவாளர்கள் உண்ணாநோன்பு இருந்ததோடு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அதன் பலனாக ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி 15-1-1972 முதல் ஊதிய உயர்வு மீண்டும் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. 17-1-1972 முதல் மீண்டும் இயல்பான நிலை திரும்பியது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரியாகக் கைத்தறி நெசவாளர்கள் சம்பளம் சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் மாஸ்டர்வீவேர்ஸ் அதை நிராகரித்தார்கள், காரணம் அது சட்டப்படி செல்லாத என்று சொல்கிறார்கள். ஆகவே இப்போது அமைத்திருக்கக்கூடிய சம்பளம் நிர்ணயிக்கும் குழு தன் அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

Employees in film studios

*277 Q. THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state whether there are proposals under the consideration of the Government to bring the employees in the Film Studios under the purview of the Labour Legislation in this State?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை. ஆனால், சட்டம் இயற்றும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : சினிமாத் தொழில் தற்போது அதிகமாக விரிவடைந்து வருகிறது. ஆதலால் இனியாவது விரைவில் இந்தச் சட்டத்தை அமல் நடத்த மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா ?